

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## ஜனவரி - 2020

*We Are Here..!! To Guide You..!!*



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 03.01.2020

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச செய்திகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- பாதுகாப்பு செய்திகள்








# தேசிய நிகழ்வுகள்

- **தமிழகத்திற்கு சிறந்த வேளாண் தொழிலாளர் விருதை பிரதமர் நரேந்திர மோடி வழங்கினார்.**
    - வேளாண் உற்பத்தியில் சிறந்து விளங்கும் விவசாயிகள், மாநில அரசுகளைக் கௌரவிப்பதற்காக, மத்திய வேளாண் துறை சார்பில் வேளாண் தொழிலாளர் விருது (கிருஷிகர்மான்) வழங்கப்படுகிறது.
    - கிருஷிகர்மான் விருது வழங்கும் விழா கர்நாடக மாநிலம் தும்கூரில் நடைபெற்றது.
    - **செய்தி துளிகள் :**
        - பிரதமரின் வேளாண் கௌரவ ஊக்கத்தொகை திட்டத்தில் 6 கோடி விவசாயிகளுக்கு 12 ஆயிரம் கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.
        - விழாவில் பிரதமர் மோடி கர்நாடகம், ஆந்திரம், கேரளம், தமிழகம், தெலுங்கானாவில் 30 தேசிய விதை மையங்கள் இருப்பதாக தெரிவித்தார்.
        - மீனவர்களின் நலனுக்காகவும், மீன் விவசாயிகளுக்காகவும் நீலப்புரட்சி திட்டத்தின் கீழ் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தினார்.
        - வேளாண் விளைபொருள் விளைச்சலில் தமிழகத்திற்கு 5-வது முறையாக இந்த விருது அளிக்கப்படுகிறது.

- நாட்டின் **முதலாவது தேசிய தீயணைப்புச் சேவைகள் கல்லூரி**

**மகாராஷ்டிரா மாநிலம் நாகபுரியில் தொடங்கப்பட்டது.**

- ○ தேசிய தீயணைப்பு சேவைகள் கல்லூரி மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும்.
- ○ மேலும் நாக்பூரில் தேசிய பேரிடர் மீட்புப் படை (என் டி ஆர் எ.்.ப்) அகாடெமிக்கான அடிக்கல்லையும் மத்திய உள்துறை அமைச்சர் நாட்டினார்.
- ○ **செய்தி துளிகள் :**
  - ▪ கடந்த 2005-ம் ஆண்டு இந்திய அரசு பேரிடர் மேலாண்மை சட்டம் இயற்றியது. அதன் அடிப்படையில் பிரதமரை தலைமையாக கொண்டு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டது.
  - ▪ தேசிய பேரிடர் மீட்பு படை தமிழகத்தின் அரக்கோணம் உள்பட 10 பட்டாலியன் படைகள் தயார் நிலையில் உள்ளன.
  - ▪ தேசிய பேரிடர் மீட்பு படை தலைமை இயக்குநர் எஸ்.என்.பிரதான் ஆவார்.

We Shine Academy™

- **அயோத்தி விவகாரங்களை கண்காணிக்க சிறப்பு குழுவை அமைத்தது மத்திய அரசு.**
  - ○ மத்திய உள்துறை அமைச்சகம் அயோத்தி தீர்ப்பை அமல்படுத்துவது தொடர்பான விவகாரங்களை கூடுதல் செயலர் ஞானேஷ்குமார் தலைமையில் மூவர் குழு அமைக்கப்பட்டுள்ளது.
  - ○ ஞானேஷ் குமார், மத்திய உள்துறை அமைச்சகத்தில் ஜம்மு

– காஷ்மீர், லடாக் ஆகியவற்றின் விவகாரங்களை கவனித்து வருகிறார்.

- **செய்தி துளிகள் :**
  - உத்திர பிரதேச மாநிலம் அயோத்தியில் சர்ச்சைக்குரியதாக இருந்த நிலத்தின் அளவு 2.77 ஏக்கர் ஆகும்.
  - அயோத்தி வழக்கில் சர்ச்சைக்குரிய இடத்தில் ராமர் கோயில் கட்ட உச்சநீதி மன்றம் கடந்த நவம்பர் 9-ம் தேதி தீர்ப்பு வழங்கியது.
  - தீர்ப்பு குறித்த விவரங்களை அமல்படுத்த மூவர் குழுவை மத்திய உள்துறை அமைச்சகம் அமைத்துள்ளது.

## சர்வதேச செய்திகள்

- **ஆஸ்திரியாவின் பிரதமராக செபாஸ்டியன் கர்ஸ்** தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.
  - ஆஸ்திரியா மத்திய ஐரோப்பிய நாடாகும்.
  - செபாஸ்டியன் கர்ஸ் ஆஸ்திரிய மக்கள் கட்சி சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
  - **செய்தி துளிகள் :**
    - ஆஸ்திரியா நாட்டு தலைநகர் வியன்னா.
    - ஆஸ்திரியா நாட்டு நாணயம் யூரோ.
    - ஆஸ்திரியா நாடு ஒரு குடியரசு நாடாகும்.

## விளையாட்டு செய்திகள்

- ஏடிபி கோப்பை அறிமுக போட்டிகள் பிரிஸ்பேனில் இன்று தொடங்குகின்றன.
    - **அமெச்சூர் டென்னிஸ் வீரர்கள் சங்கம் சார்பில்** முதன்முறையாக **ஏடிபி கோப்பை போட்டிகள் ஆஸ்திரேலியாவில்** தொடங்க உள்ளது.
    - டென்னிஸ் ஆஸ்திரேலியா அமைப்பும் ஏடிபி-யும் இணைந்து புதிய ஏடிபி கோப்பை போட்டிகளை நடத்துகின்றன.
    - **செய்தி துளிகள் :**
        - 2020-ம் ஆண்டு அறிமுக போட்டியாக நடைபெற உள்ள இதில் 24 நாடுகளை சேர்ந்த அணிகள் கலந்து கொள்கின்றன.
        - ஆஸ்திரேலியாவில் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் போட்டி நடைபெறும்.

## பாதுகாப்பு செய்திகள்

- ஒருங்கிணைந்த விமானப் பாதுகாப்புப் பிரிவை உருவாக்க அதற்கான வழிகாட்டுதல்களை வழங்க முப்படை தளபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.
    - **ராணுவம், கடற்படை, விமானப்படை** ஆகியவற்றுக்கிடையே **ஒருங்கிணைப்பை** ஏற்படுத்தும் நோக்கில் **"முப்படைத் தளபதி"** பதவியை உருவாக்கியது.
    - ராணுவம், கடற்படை ஆகியவற்றில் தனித்தனி விமானப் பிரிவுகள் உள்ளன.



We Shine Academy™

- **செய்தி துளிகள் :**
  - ஒருங்கிணைந்த விமானப் பாதுகாப்பு பிரிவை உருவாக்குவதற்கான வழிகாட்டுதல்களை ஜூன் மாதம் 30-ம் தேதிக்குள் வழங்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.
  - இந்தியாவின் முதல் முப்படைகளுக்கான தலைமை தளபதியாக விபின் ராவத் நியமிக்கப்பட்டார்.
  - பாதுகாப்பு துறையின் கீழ் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பாதுகாப்பு விவகாரங்கள் துறையின் தலைவராக விபின் ராவத் செயல்படுவார்.

## திருக்குறள்

**குறள் எண் : 66**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : மக்கட்பேறு

**குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்.**

**விளக்கம் :** தம் குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்டு மகிழாதவர், குழல் ஓசையும் யாழ் ஓசையும் இனியவை எனக்கூறுவர்.